| O.S No. | : | 199/2021 |
|---|---|---|
| DATE | : | 21.11.2025 |
| பெயர் | : | ஆறுமுகம் |
| தந்தை பெயர் | : | சுந்தரம் |

<u>பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை</u>

1. நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். வாதி பத்மாவதி எனது மனைவி ஆவார். வழக்கை அவர் தான் முதலில் தாக்கல் செய்தார் பின்னர் நான் முகவர் என்ற முறையில் அவருக்காக ஆஜரானேன். வாதிக்கு உடல்நிலை பிரச்சனை இருப்பதால் அவரால் நேரில் ஆஜராக இயலவில்லை. அது சம்மந்தமான மருத்துவ சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி எனது அண்ணன் ஆவார். 2,3 பிரதிவாதிகள் அவரின் மனைவி மற்றும் மகன் ஆவார். என்னுடன் பிறந்தவர்கள் 1ம் பிரதிவாதி, தணிகைமைலை, அஞ்சுதம், சாந்தி ஆவார்கள். எனது தந்தை பெயர் சுந்தரம். எனது தந்தை காலமானதற்கு பிறகு அவரது சொத்துக்களை நாங்கள் 02.04.2012ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் கையெழுத்து போடவில்லை. அதில் எனக்கும் சொத்து ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் எனக்கு ஒதுக்கப்பட்டிருந்த சொத்தை நான் ஏற்றுக் கொண்டு சுவாதினம் எடுத்துக் கொண்டேன்.

2. எனக்கு 3 இடங்களில் சொத்தில் பங்கு ஒதுக்கியிருந்தார்கள் பத்திரம் பார்த்தால் தான் அதன் விவரங்களை சொல்ல முடியும். அவற்றில் இரண்டை நான் விற்றுவிட்டேன். எதை விற்றேன் என்று பத்திரத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். நான் விற்காமல் வைத்தது சிறுகாவேரிப்பாக்கம் கிராமத்தில் ரோடு பக்கத்தில் உள்ள எனது பகுதி. அதை தான் எனது மனைவிக்கு நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன். செட்டில்மெண்ட்டில் நான் எழுதி கொடுத்தது பாகப்பிரிவினையின் மூலம் எனக்கு ஒதுக்கப்பட்ட அதே அளவு

தான். பாகப்பிரிவினை செய்த போது எனது பகுதியில் பம்புசெட் இருந்தது, செட்டில்மெண்ட் செய்யும் போது அது இருந்தது.

3. நான் சுமார் 6 லட்சம் ரூபாய் செலவு செய்து எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டி உள்ளேன் அதற்கான ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை. செண்டரிங் வளர்த்து சீட் போட்டு வீடு கட்டியுள்ளேன். அங்கு என்னிடம் வேலை செய்யும் நபர் குடியிருந்து வருகிறார். அந்த இடத்தில் செண்டரிங் அமைப்புடன் கூடிய ஒரு அறை கொண்ட வீடும் பம்பு செட்டிற்கு ஒரு செட்டும் கட்டியுள்ளேன். மேற்கில் 6 அடியும், தெற்கில் 10 அடியும் கொண்ட சீட் இடமாகும். தாவாவில் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நான் கட்டியுள்ள இடத்திற்கு நான் பஞ்சாயத்தில் இருந்து கட்டிட அனுமதி வாங்கவில்லை.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.